1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளர்ச்சியில்லாமல் அனைவரையும் அழைத்து சேர்த்துப் பேசி, இந்த திட்டத்தை செயல்படுத்தலாம் என்று அரசு கருதுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்களுடைய ஒத்துழைப்பும் இருக்குமேயானால், விரைவில் செயல்படுத்தலாம் என்று அரசு கருதுகிறது.

வடாற்காடு மாவட்டத் தலைநகரில் புதிய மருத்துவமனை.

*வினா எண். 444—திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட தலைநகரில், புதிய மருத்துவமனை 15 இலட்சம் செலவில் கட்டப்பட்டு பல மாதங்கள் ஆகியும் பயன்படுத்தாமல் இருப்பது உண்மையா?

(ஆ) அதற்கான காரணம் என்ன?

(இ) விரைவில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ), (ஆ) மற்றும் (இ) வடாற்காடு மாவட்டத்தில்வேலூரில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நலஈட்டுறுதிகழகத்தின் மருத்துவமனை ஒன்று கட்டி முடிக்கப்பட்டு 8–1–1981 முதல் செயல்படத் துவங்கியுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைக் கேட்டது 7 மாதங்களுக்கு முன்னால். அப்பொழுது அந்த மருத்துவமனை திறக்கப்படாமல் இருந்தது. இப்போது திறந்ததற்காக நன்றி, ஆனால் அந்த மருத்துவ மனையில், இன்னும் கூட சூப்பிரண்டிடென்டென்ட் போன்றவர்கள் நியமனம் செய்யப்படவில்லை என்றும், ஸ்டாப் நர்சுகள் போதுமான அளவில் நியமனம் செய்யப்படவில்லை என்றும் அதனால் வேலைகள் பாதிக்கப்படுவதாகவும் தெரிகிறது. ஆகவே உடனடியாக அவர்களை நியமனம் செய்து அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் முன் வரும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS